**தலைப்பு 273 – புத்தளம் மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 273 – புத்தளம் மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 10 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதிஏற்பாடும் செலவும்**

மாவட்ட செயலகத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 724.64 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 709.13 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 15.51 மில்லியன் அதாவது 2.14 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 649.64 | 644.80 | 4.84 | 0.75 |
| மூலதனம் | 75.00 | 64.33 | 10.67 | 14.23 |
| மொத்தம் | 724.64 | 709.13 | 15.51 | 2.14 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு 26 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 18 திணைக்களங்களினால் ரூபா 3,160.51 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 2,364.08 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 796.43 மில்லியன் அதாவது 25.20 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 27301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 47.00 | 46.79 | 34.00 | 41.27 | 170.00 | 144.03 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 07 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 306.04 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0070/000 | 0.76 |
| 6000/0000/00/0002/0095/000 | 1.97 |
| 6000/0000/00/0013/0063/000 | 77.36 |
| 6000/0000/00/0016/0046/000 | 208.58 |
| 6000/0000/00/0017/0016/000 | 8.39 |
| 6000/0000/00/0019/0009/000 | 8.26 |
| 6000/0000/00/0020/0003/000 | 0.72 |
| மொத்தம் | **306.04** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

புத்தளம் மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரற்படுத்தல் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (ii) | கணனி துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (iii) | இழப்பு தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (iv) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (v) | திணைக்கள ஒதுக்கீட்டுப் (அங்கீகரிக்கப்பட்ட) பேரேடு | நிதிப்பிரமாணம் 447 |
| (vi) | கணக்காய்வு ஐயவினாப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 452(1) |
| (vii) | மின் உபகரணப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (viii) | கடன் பதிவேடு | நிதிப்பிரமாணம் 485 |
| (ix) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (x) | மாதாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு | நிதிப்பிரமாணம் 1646 |

## 3.2 கணக்கீட்டு ஐயவினாக்களுக்குப் பதிலளித்தல்

மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 06 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2017 யூன் 29 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 91,894,220 ஆகும்.

## 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 29 ஆந் திகதிய 7/2015 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 1202 ஆம் செலவின விடயத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 15 சதவீத நிதிஏற்பாடு கட்டாயமாக சேமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 273-1-1-1202 மற்றும் 273-1-2-1202 ஆம் செலவின விடயங்கள் இரண்டிலும் சேமிக்கப்பட்ட நிதிஏற்பாடுகள் முறையே 13 சதவீதம் மற்றும் 11 சதவீதமாக இருந்தன.

(ஆ) செயற்திட்டம் 01 இல் செலவின விடயம் இலக்கம் 2014 இன் கீழ் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்துவதற்காக போதியளவான கட்டுநிதி கிடைக்காமையினால் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 10,630,535 நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 3.4 பொது வைப்புக் கணக்கு

மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ் வரும் பிரதேச செயலகங்களில் பொது வைப்புக் கணக்குகளின் மீதிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், அமைச்சு, திணைக்களம், மாவட்ட செயலகம், கூட்டுத்தாபனம், சபைகள் மற்றும் அதிகாரசபைகளில் பல்வேறு பணிகளை நிறைவேற்றுவதற்காக 08 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 33,190,607 கூட்டுத்தொகையான பணம் உரிய பணிகள் நிறைவேற்றப்படாது அல்லது நிறைவேற்றப்பட்டதன் பின்னர் சேமிப்பாக வைப்புக் கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) அவ்வாறே தனியார் நிறுவனம் மற்றும் அரச சார்பற்ற 05 நிறுவனங்களில் பல்வேறு பணிகளுக்காக 03 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 3,349,583 தொகை உரிய பணிகள் நிறைவேற்றப்படாது அல்லது நிறைவேற்றப்பட்டதன் பின்னர் சேமிப்பாக வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(இ) பள்ளம பிரதேச செயலகத்தால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,837 தொகையான இனங்காணப்படாத வைப்பு மீதியொன்று காணப்பட்டதுடன், அதனை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பள்ளம பிரதேச செயலகத்தால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ''சிகாஸ்'' கணனி மாதாந்த கணக்குகளின் அறிக்கையினதும் பொது வைப்புப் பதிவேட்டினதும் பிரகாரம் வைப்புக் கணக்கில் ரூபா 93,100 வேறுபாடொன்று காணப்பட்டது.

(உ) நிதிப்பிரமாணம் 571(1) இன் பிரகாரம் பொது வைப்புக் கணக்குகளின் மீதி தொடர்பாக அரையாண்டு அறிக்கை தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

27301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,536,663 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 03 மாதம் முதல் 05 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) மாவட்ட செயலகத்தின் கீழுள்ள புத்தளம் மற்றும் ஆனமடுவ பிரதேச செயலகங்கள் இரண்டிலும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு இடர்கடன் செலுத்தும் போது பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் ரூபா 536,190 தொகையான இடர்கடன் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கறுவலகஸ்வெவ பிரதேச செயலகத்தின் சாரதியின் 2016 ஒக்தோபர் மாதத்திற்குரியதாக அறவிடப்பட்ட கடன் தவணைப்பணம் மற்றும் வட்டியாக ரூபா 6,415 கடன்பதிவேட்டில் பதியப்படாதிருந்ததுடன் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தரின் மேற்குறிப்பிட்ட மாதத்தில் விழா முற்பண தவணைப்பணமாக ரூபா 1,250 தொகை அறவிடப்படாதிருந்த போதும் அறவிடப்பட்டதாக கடன் பதிவேட்டில் பதியப்பட்டிருந்தது.

(ஈ) ஆச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தரிடமிருந்து தீர்க்கப்பட்ட விழா முற்பணம் ரூபா 1,250 மீதி இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டமையும், மாதம்பே பிரதேச செயலகத்திலிருந்து பணியிட மாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 85,824 தொகை கடன் மீதி இருதடவை தீர்த்தல்களும் இடம்பெற்றிருந்தன. அவ்வாறே முந்தல் பிரதேச செயலகத்தின் ஊழியரிடமிருந்து கடன் தவணைப் பணம் ரூபா 50 குறைத்தும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

## 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### உள்ளகக் கணக்காய்வு

புத்தளம் மாவட்ட செயலகத்தால் உள்ளக்க கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்ட பிரகாரம் மாவட்ட செயலகத்துக்குரிய சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|
| காணி | 07 | 02 வருடங்களுக்கு மேல் |
| கட்டிடம் | 07 | - மேற்படி - |
| மோட்டார் வாகனங்கள் | 06 | - மேற்படி - |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வொன்றை நடாத்துதல்**

2016 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகைகள், பற்றாக்குறை மற்றும் ஏனைய சிபாரிசுகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

புத்தளம் மாவட்ட செயலகத்தால் சில சொத்துக்கள் முறையற்ற வகையில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சொத்துக்களின் வகை | வழங்கப்பட்டுள்ள நிறுவனம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|
| | | ரூபா | |
| காணி | தொல்பொருள் திணைக்களம் | மதிப்பீடுசெய்யப்படவில்லை | காண்பிக்கப்படவில்லை |
| | கலாசார நிலையம் | 12,000,000 | - மேற்படி - |
| | மதுவரிக் கட்டிடம் | 10,000,000 | - மேற்படி - |
| | விளையாட்டுச் சங்கம் | மதிப்பீடுசெய்யப்படவில்லை | - மேற்படி - |
| | புனர்நிர்மாண அலுவலகம் | 4,000,000 | - மேற்படி - |
| | வேல்ட் விசன் நிறுவனம் | 6,450,000 | 2016.06.30 வரை |
| கட்டிடம் | தொல்பொருள் திணைக்களம் | மதிப்பீடுசெய்யப்படவில்லை | காண்பிக்கப்படவில்லை |
| | கலாசார நிலையம் | 2,000,000 | - மேற்படி - |
| | மதுவரிக் கட்டிடம் | 1,300,000 | - மேற்படி - |
| | வேல்ட் விசன் நிறுவனம் (முந்தலம பழைய பிரதேச | 79,000,000 | 02 வருடங்களுக்கு குறைவு |

| | | |
|---|---|---|
| செயலகக் கட்டிடத்தில்) | | |
| விளையாட்டுச் சங்கம் | மதிப்பீடுசெய்யப்படவில்லை | - மேற்படி - |
| புனர்நிர்மாண அலுவலகம் | 1,000,000 | - மேற்படி - |
| வேல்ட்விசன் நிறுவனம் | 1,550,000 | 02 வருடங்கள் முதல் |

**(ஈ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துதல்**

தவகத்தேகம பிரதேச செயலகத்திற்கு தனியார் நிறுவனமொன்றிலிருந்தும் இடர் முகாமைத்துவ அமைச்சிலிருந்தும் ரூபா 3,500,000 கூட்டுப்பெறுமதியான உழவு இயந்திரமொன்றும் நீர் பவுசரொன்றும் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) கையேற்கப்படாத சொத்துக்கள்**

தங்கொட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் சென்திரியாமுல்ல எட்டபகஹத்த குடியிருப்புக்களில் செயற்திட்டத்திற்காக ரூபா 1,173,239 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அதில் கிணறு அமைந்துள்ள காணி மாவட்ட செயலகத்திற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புத்தளம் மாவட்ட செயலகத்தினால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்குக் குறைவான காலமாக கொண்டுவரப்படுகின்ற தீர்க்கப்படாத சொத்துக்கள் ரூபா 1,717,329 ஆகும்.

(ஆ) ஒரு செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு முழுமையாக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், மேலும் அந்த செலவின விடயத்தில் நிதிஏற்பாடு காணப்படாதிருக்கும்போது மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 22,175 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

### 3.9 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை** | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 6:1 ஆம் உப பிரிவு | புத்தளம் மாவட்ட செயலகத்தில் 13 உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அரசாங்க விடுதிகளில் குடியிருந்து வருவதுடன் மேலும் 09 உத்தியோகத்தர்களுக்கு 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும், அரசாங்க விடுதிகளைப் பெற்றுக்கொள்ளும் காத்திருக்கும் பதிவேட்டில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 5:2:1 ஆம் பிரிவு | வனாத்தவில்லு பிரதேச செயலாளர், மாவட்ட செயலகத்தின் அரசாங்க விடுதியொன்றில் குடியிருந்து வந்ததுடன் அந்த விடுதியின் வாடகை ரூபா 8,115 தொகையும், ஆணமடுவ பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 31,622 தொகையான அரசாங்க விடுதியின் வாடகையும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ)** இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| நிதிப் பிரமாணம் 128(2)(இ) | ஒவ்வொரு அரையாண்டிற்காகவும் நிலுவை வருமான அறிக்கை தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 389(அ), 390(அ) மற்றும் (ஆ) | தங்கொட்டுவ பிரதேச செயலகம் காசோலை கையளிக்கும் பதிவேடொன்றைப் பேணிச் செல்லாதிருந்ததுடன் காசோலை புத்தகத்திலிருந்து அகற்றப்பட்டதன் பின்னர் பெறுனருக்கு கையளிக்கப்படும் வரை பாதுகாப்பாக காசோலை வைக்கப்பட வேண்டிய போதிலும், விடயப்பொறுப்பு உத்தியோகத்தர் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| **(இ)** | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை<br>-------------------------------------------------------------<br>2015 நவம்பர் 26 ஆந் திகதிய MNPEA1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது 08 பிரதேச செயலகங்களினால் அரசாங்க அதிபர்களின் மாநாட்டின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பெறுகைகள் நடைமுறைகளுக்குப் புறம்பாக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,952,933 தொகையான 21 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சமூக அடிப்படையிலான அமைப்புகளிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. |

## 3.10 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாது கைவிடல், செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல்

கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம், வயம்ப அபிவிருத்தி அமைச்சின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் தங்கொட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் மெல்லவ மில்லகஹவத்த 4 ஆவது உப வீதிக்கு தார் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 810,000 கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் வென்னப்புவ பிரதேச சபைக்கு 2016 திசெம்பர் 15 ஆந் திகதி வேலையை ஆரம்பிப்பதற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், காலம் போதியளவில் இல்லாமையினால் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாது கைவிடல்

கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் ஆச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் பண்டாரஹேன தம்மாலோக்க வித்தியாலய அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அந்த பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு ரூபா 409,357 மதிப்பீடொன்றின் அடிப்படையில் கையளிக்கப்பட்டிருந்ததுடன், அந்த வேலைகள் 2016 ஒக்தோபர் 19 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், மூலப்பொருட்கள் மற்றும் ஊழியத்தை வழங்குவதற்கு வசதியின்மையின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

### (இ) செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் சிலாபம் பிரதேச செயலகத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட பின்வரும் இரண்டு செயற்திட்டங்களுக்கும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| செயற் திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| சிலாபம் எககொடவெல்ல முதல் குருசபாடுவ வரை மீன்பிடி நிலையத்தை சுற்றி குழியொன்று நிர்மாணம் இலக்கம் 05 | 1,503,810 | 2016.11.08 | 2016.12.08 | சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினை தோன்றியமை |
| சிலாபம் எககொடவெல்ல முதல் குருசபாடுவ வரை மீன்பிடி நிலையத்தை சுற்றி குழியொன்று நிர்மாணம் இலக்கம் 01 | 307,976 | 2016.11.08 | 2016.12.08 | சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினை தோன்றியமை |

**(ஈ) நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்முன்னேற்றத்தைப் பெறாதிருந்த செயற்திட்டம்**

கணக்காய்விற்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம், வென்னப்புவ பிரதேச செயலகப் பிரிவில் மேற்கு நைனமடம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் ''கமின் கமட்ட தொறின் தொறட்ட'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெவ றவும அருகில் கிணறொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 980,000 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 971,121 தொகை தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதேசத்தின் விவசாய அமைப்பின் எதிர்ப்பின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(உ) காலதாமதத்தின் பின்னர் வேலை பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள்**

கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் கீழே குறிப்பிடப்பட்ட 06 செயற்திட்டங்கள் கால தாமதத்தின் பின்னர் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

| செயற்திட்டம் | வழங்கப்பட்டுள்ள தொகை | வேலை ஆரம்பிக்க வேண்டிய திகதி | தாமதக் காலம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | நாட்கள் |
| களப்பு வீதி வடிகாண் முறைமை நிர்மாணம் | 99,000 | 2016.08.18 | 03 |
| மூன்றாம் குறுக்கு வீதி மௌலா மஸ்ஜித் அருகில் மதகு திருத்தம் | 548,565 | 2016.08.18 | 32 |
| மானச்சேரி ஏக்கர் 40 பிரதான வீதி கிரேடர் செய்யப்பட்டு கிரவல் போடுதல் | 97,614 | 2016.10.31 | 27 |
| மதுரகம ரேணுகா வீதிக்கு கிரேடர் செய்யப்பட்டு கிரவல் போடுதல் | 83,300 | 2016.08.18 | 68 |
| தில்லையடி மஸ்ஜித் மஹஜரீன் சமயப் பாடசாலைக்கு கல் பதித்தல் | 194,000 | 2016.10.31 | 29 |
| பு/அநகாரிக வித்தியாலத்தில் 02 மலசல கூடங்களை நிர்மாணித்தல் | 148,654 | 2016.08.18 | 44 |

**(ஊ) ஒப்பந்த நிறைவேற்றுதலில் நலிவுகள்**

08 பிரதேச செயலகங்களினால் நிறைவேற்றப்பட்டிருந்த 12 செயற்திட்டங்களில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

| பிரதேச செயலகம் | செயற்திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் | செலவினம் | நலிவுகள் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | |
| ஆனமடுவ | திரு. அரசாங்க அவரின் வீட்டுக்கருகில் மதகு நிர்மாணம் | - | 77,593 | வீதியின் உயரமான இடத்தில் மதகு நிர்மாணிக்கப்பட்டமையால் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| புத்தளம் | விவசாயச் சங்க மண்டபத்தின் வேலையைப் பூர்த்தி செய்தல் | 150,000 | 150,000 | விவசாயச் சங்கத்தின் நிதியத்தைப் பயன்படுத்தி நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த விவசாயச் சங்க மண்டபத்தின் கூரை மட்டம் வரை மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |
| புத்தளம் | பிரிவில் இரண்டு வாய்க் கால் வீதிகளின் புனரமைப்பு நடவடிக்கைகள் | 1,930,460 | 1,930,460 | இரண்டு வாய்க்கால் வீதிகளின் நடுப்பகுதி மாத்திரம் புனரமைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றில் கூடுதலான பகுதியொன்று குவிந்து காணப்பட்டமையினால் அதன் இறுதிப்பகுதியில் புனரமைப்பு மேற்கொள்ளப்படாமையினால் நீர் வழிந்தோடிச் செல்லவில்லை. |
| வனாத்தவில்லு | திரு. ஜலீல் அவர்களின் வீட்டுக்கு அருகிலிருந்து பிரதான வீதி வரை வீதிக்கு முற்கலவை கொங்கிரீட் கல் பதித்தல் | 915,965 | பரிசோதனைச் சந்தர்ப்பத்தின் போது செலுத்தப்பட்டிருக்க வில்லை | i. வீதி 110 மீற்றர் தூரத்திற்கும் 3 மீற்றர் அகலத்திற்கும் முற்கலவைக் கற்கள் பதிக்கப்பட வேண்டிய போதிலும், வீதியிள் சில இடங்களில் 2.98, 2.97 மீற்றர் அகலத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், இருபக்கமும் கர்ப் 6 அங்குல அகலத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் அகலம் 4 அங்குலம் முதல் 5.5 அங்குலம் வரையான வீச்சில் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.<br><br>ii. வீதியின் இரண்டு பக்கமும் ஓரங்களுக்கு போதியளவான பிரகாரம் கிரவல் இட்டு பரவலாக்கப்படாதிருந்த போதிலும் அதனால் அந்த வீதியின் இருப்பிற்கு அதிக தாக்கமாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | iii. வீதியின் சில இடங்களில் பதிக்கப்பட்டிருந்த முற்கலவைக் கற்கள் இருபக்கமும் உள்ள கட்டுக்களுக்கு மேலும் (கர்ப்) கீழும் பூர்த்தி செய்யப்பட்டமையால் வீதியின் மேற்பரப்பின் தனித்தன்மை பாதிக்கப்பட்டிருந்தது.<br><br>iv. இந்த வேலைக்குரிய பராமரிப்புப் குறிப்புப் புத்தகம் பேணப்படாமையினால் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையில் வழங்கிய ஆலோசனை இல்லாமையினால் வேலையின் மேற்பார்வை நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. |
| வனாத்தவில்லு | கரடிபூவல் மல்ட்டி பாம் திருமதி ராஜித நயனி யின் வீட்டுக்கு அருகிலுள்ள வீதிக்கு கொங்கிரீட் முற்கலவைக் கல் பதித்து அபிவிருத்தி செய்தல் | 985,800 | மேற்பார்வை சந்தர்ப்பதின் போது செலுத்தப்பட்டிருக்க வில்லை | i. இந்த வீதி 2016 நவம்பர் 25 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்த வேலைகள் 2016 திசெம்பர் 08 ஆந் திகதியிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் கால நீடிப்பைச் செய்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>ii. வீதியின் இருபக்கமும் “கர்ப்”சுவர் 5 அங்குலம் நில மட்டத்தின் கீழ் 4 அங்குலம் நில மட்டத்திற்கு மேலும் அமையுமாறு நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சில இடங்களில் அதன் மொத்த உயரம் 5.5 அங்குலத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.<br><br>iii. களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 2016 திசெம்பர் 08 ஆந்திகதி வரையிலும், வீதியின் ஆரம்பம் முதல் இறுதிவரை கற்களை பதிக்கும் வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>iv. அவ்வாறு முற்கலவை கொங்கிரீட் கல் பதித்தல் இடங்களிலும் மதிப்பீட்டின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பிரகாரம் வீதியின் மேற்பரப்பில் கருங்கல்துாள் இட்டு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>v வீதியின் ஆரம்பம் முதல் கிராம பக்கம் செல்லும் போது தெற்கு பக்கத்தின் இடமொன்றில் ''கர்ப்'' சுவர் நீர் வழிந்தோடும் வடிகாண் பக்கத்திற்கு குறுகியதாக இருந்தது. அவ்வாறே பயன்படுத்தப்பட்ட கொங்கிரீட் முற்கலவை கற்கள் அதற்காக பொருத்தமானது என ஆய்வுகூட தரப்பரிசோதனை அறிக்கையும் பெறப்பட்டிருந்தது. |
| முந்தலம் | நல்லதன்தலுவ ஆரம்ப பாடசாலைக்கு அருகிலுள்ள வீதிக்கு கொங்கிரீட் இடல் | 1,931,459 | பரிசோதனைச் சந்தர்ப்பத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்க வில்லை | i. வீதிக்காக பயன்படுத்தப்பட்ட கொங்கிரீட் கலவைக்குப் பயன்படுத்தப்பட்ட மணலில் களி உள்ளடங்கியிருந்தமையால் வீதியின் மேற்பரப்பில் சிறுகுழிகள் உருவாகியிருந்தது.<br><br>ii வீதியின் மேற்பரப்பில் குறிப்பிட்ட நியம துாரத்தில் குறித்த பிரகாரம் ஆதாரப்படுத்தும் முட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| நவகத்தேகம | மஹஅந்தறவெவ குடிநீர் செயற்திட்டம் | 4,389,804 | 4,389,804<br>71,938 | இந்த குடிநீர் செயற்திட்டத்தின் குழாய் வழி நெருக்கடிக்குள்ளாகியமையால் 2016 இல் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 71,938 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அதன் ஏனைய நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாமையினால் நலன்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. |
| நவகத்தேகம | மஹமெத்தேவ நீர் செயற்திட்டம் - கிணறு நிர்மாணம் | 438,592 | 438,591 | இதில் கிணறு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், தண்ணீர் தாங்கி, குழாய் முறைமை நிர்மாணிக்கப்படதிருந்ததுடன் நீர்ப் பம்பியும் வழங்கி பொருத்தப்பட்டிருக்கவில்லை. |
| மாதம்பை | இஹலகம சணச வங்கி அருகிலுள்ள வீதிக்கு முற்கலவை கொங்கிரீட் கல் பதித்து அபிவிருத்தி செய்தல் | 323,735 | 288,849 | i. 06 அங்குல அகலத்திலும் 09 அங்குல உயரத்திலும் (நிலத்திற்கு அடியிலிருந்து) இருபக்கமும் ''கர்ப்'' சுவர் அமைக்கப்பட வேண்டிய போதிலும், 4 அங்குல உயரத்தில் மாத்திரம் அது நிர்மாணிக்கப்பட்டமையினால் ரூபா 20,845 தொகை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>ii. மேற்கூறப்பட்ட வகையில் ''கர்ப்''சுவர் அமைக்கப்பட்டமையினால் சட்டரீனுக்காக ரூபா 3,754 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>iii. ''கர்ப்'' சுவருக்காக அத்திவாரம் வெட்டப்படாமல் அதனை நில மட்டத்திலிருந்து அமைக்கப்பட்டமையினால் அதற்கு ரூபா 1,101 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>iv. முற்கலவை கொங்கிரீட் கற்கள் 122 அடி நீளத்தில் பதிப்பதற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 120½ அடி நீளத்தில் பதிக்கப்பட்டிருந்தமையினால் அதற்காக ரூபா 2,628 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>v. வீதியின் இருபக்க ஓரங்களுக்கும் போதியளவான கிரவல் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் இடப்பட்டிருந்த கிரவலும் பரவலாக்கப்பட்டிருக்கவில்லை. |
| மாதம்மை | திருமதி. இலங்கமுதலி வீடு வரையான வீதிக்கு முற்கலவை கொங்கிறீட் கல் பதித்தல் | 659,247 | 655,980 | i. 06 அங்குல அகலத்திலும் 09 அங்குல உயரத்திலும் ( நிலத்தின் கீழ் 05 அங்குலமாக இருக்கும் வகையில்) கொங்கிறீட் கர்ப் சுவர் 4 அங்குல உயரத்தில் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தது. (நிலமட்டத்திலிருந்து மேலே மாத்திரம்) அதனால் அதற்காக ரூபா 51,544 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>ii. மேற்கூறப்பட்ட கர்ப் நிறுவனத்தால் சட்டரீனுக்கு ரூபா 8,555 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>iii. மேற்கூறப்பட்ட (i) இல் காண்பிக்கப்பட்ட பிரகாரம் கர்ப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | சுவரிற்காக அத்திவாரக் காண் வெட்டப்படாமையினால் அதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 2,739 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>iv. வேலை அளவிடைப் பத்திரத்தின் பிரகாரம் 317 அடி நீளத்திற்கும் 6.6 அடி அகலத்திற்கும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், வீதியின் அகலம் 5 அடி 10 அங்குலம் முதல் 6 ½ அடி வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.<br><br>v. மேற்தளத்தில் இரு பக்கங்களிலும் போதியளவு கிரவல் இட்டு அதனை இறுக்கமடையச் செய்திருக்கவில்லை. |
| வென்னப்புவ | வைக்கால அரசாங்க பாடசாலையின் விளையாடரங்கு நிர்மாணம் | 978,838 | 973,847 | i. விளையாட்டரங்கின் முன்பக்க செங்கல் சுவர் கொங்கிரீட் லின்டருடன் மேலிருந்து அத்திவாரம் வரை வெடித்திருந்தது.<br><br>ii. மேலதிக வேலை விடயம் 3 இன் கீழ் உலோகப் பீலி (AL Gutters) தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 3 இடங்களில் நீர்க் கசிவு ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.<br><br>iii. இந்த வேலையின் போது நிறைவேற்றப்பட்ட கொங்கிரீட் ‘‘கொலம்ஸ்’’ மற்றும் ‘‘பீம்ஸ்’’ உரிய நியமத்திற்குப் புறம்பாக கல் வெளிப்படும் வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |
| வென்னப்புவ | கிங்ஓய அருகில் சனசமூக நிலைய நிர்மாணம் | 979,977 | 783,987 | i. கூரையின் முகட்டு ஓடுகள் சாந்து பூசிக் கட்டப்படாதிருந்த போதிலும் அதற்காக ரூபா 9,761 தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br><br>ii. மதிப்பீட்டின் பிரகாரம் கூரையை அமைப்பதற்காக 02 இரும்பு தீராந்திகள் நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கான அங்கீகாரமின்றி 02 மரத்திலான தீராந்திகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. |

**3.11 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நவகத்தேகம பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் உருவாகின்ற கழிவுப் பொருட்களிலிருந்து கூட்டுப்பசளை உற்பத்தி செய்யும் செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக காணியொன்றை வழங்குவதற்காக நவகத்தேகம பிரதேச செயலாளர் தெரிவித்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டின் போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிளிசறு செயற்திட்டத்தின் மூலம் ரூபா 1,776,351 நிதிஏற்பாடு நவகத்தேகம பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. காணி வழங்குவதிலுள்ள தாமதத்தின் காரணமாக அந்த நிதிஏற்பாடு மீளக் கையேற்கப்பட்டிருந்தது. உத்தேசக் காணியின் நில அளவை நடவடிக்கைகளுக்காக பிரதேச சபை ரூபா 57,500 தொகையைச் செலவிட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் தெயட்ட கிருள (தேசத்திற்கு மகுடம்) இன் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நவகத்தேகம நடன மண்டபம் பிரதேச சபைக்குக் கையளிக்கப்பட்டதாக நவகத்தேகம பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்ட எழுத்துமூல உத்தரவாதத்தின் அடிப்படையில் அதனை பொது மக்களின் பாவனைக்குக் கையளிப்பதற்கு முன் நிலத்தைத் தயாரித்தல் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக பிரதேச சபை ரூபா 300,204 இனைச் செலவிட்டிருந்தது. பின்னர் இந்த நடன மண்டபத்தை பிரதேச சபைக்குக் கையளிப்பதற்கு மாவட்ட செயலாளர் மறுத்ததன் அடிப்படையில் சபை செலவிட்டிருந்த தொகையில் 25 சதவீதத்துடன் ரூபா 375,255 தொகையும் மீளச் வழங்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதேச செயலாளரால் அந்த கோரிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட ஓய்வூதியத் திருத்தத்தின் தரவுகளை கணனிமயப்படுத்தும் போது மாதம்பை பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களின் கவனமின்மையின் காரணமாக அதிபர் ஒருவரினதும், தொழிலாளர் ஒருவரினதும் தரவுகள் மாற்றப்பட்டு உள்ளடக்கப்பட்டமையினால் 2015 ஆகஸ்ட் மாதம் முதல் 2017 மார்ச் மாதம் வரை அதிபருக்கு ரூபா 114,025 தொகை குறைவாகவும், தொழிலாளருக்கு ரூபா 82,856 அதிகரித்தும் செலுத்தப்பட்டிருந்தது.

**3.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகள் பின்பற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கற்பிட்டி பிரதேச செயலகம் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2:14:1 வழிகாட்டியினதும் 3:4:2(ஆ) வழிகாட்டியினதும் ஏற்பாடுகளுக்கு முரணாக ஒரு ஒப்பந்தகாரரின் கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டு ரூபா 7,002,289 தொகையான 13 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மஹகும்புக்கடவல பிரதேச செயலகப் பிரிவில் நிறைவேற்றப்பட்ட 25 செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது ரூபா 500,000 இற்குக் குறைவான 22 செயற்திட்டங்கள் மற்றும் ரூபா 1,000,000 தொகையான 03 செயற்திட்டங்களின் ஒப்பந்தத்திற்காக அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2:14:1 ஆம் வழிகாட்டியின் ஏற்பாடுகளுக்கு முரணாக அதன் கூறுவிலை கிடைத்திருந்த போதிலும், அந்த ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஒரு ஒப்பந்தக்காரருக்கு 15 ஒப்பந்தங்களும் கையளிக்கப்பட்டிருந்தன.

(இ) வனாத்தவில்லு பிரதேச செயலகம் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5:4:8(ஆ) வழிகாட்டியின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஒரு ஒப்பந்தகாரருக்குரியதாக பெறப்பட்டிருந்த பாதுகாப்பு பிணைமுறி வேலை பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த திகதியிலும் 03 மாதங்கள் விஞ்சி பெறவேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நவகத்தேகம பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 2,865,862 தொகையான 05 செயற்திட்டங்களுக்காக ஒரு ஒப்பந்தகாரர் மாத்திரம் முன்வந்திருந்ததுடன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4.2(ஆ) வழிகாட்டிக்கு முரணாக அவருக்கு அந்த ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

**3.13 நட்டங்களும் இழப்புக்களும்**

இங்கிணிமிட்டிய தொழில் முயற்சியின் கீழ் கொன்கடவல கிராமத்தின் ஆ.க.பீ.3218 ஆம் நிலவரைபடத்திற்குரிய இலக்கம் 327 முதல் 331 வரையான காணிக்கூறுகள் 1980 ஆம் ஆண்டின்போது அரசாங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவற்றிற்கு இழப்பீடாக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 725,070 கொடுப்பனவிற்காக அலுவலகத்திற்குக் கிடைத்திருந்தது. உரித்து தொடர்பாக பிரச்சினையான நிலைமையினால் 2014 ஆம் ஆண்டின் போது அத்தொகை பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், 1950 இன் 9 ஆம் இலக்க காணி கைப்பற்றல் அதிகாரச்சட்டத்தின் 10 மற்றும் 11 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அத்தொகையை நீதிமன்றத்தில் வைப்பிலிடுவதற்கு தேவையான பத்திரிகை அறிவித்தலை பிரசுரிப்பதற்கு முன்னாள் இருந்த உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதனால் அது நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. பின்னர் இப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருந்ததுடன் காணி கைப்பற்றல் அதிகாரச்சட்டத்தின் 17 ஆவது பிரிவின் பிரகாரம் குறித்த காலத்தில் இழப்பீடுகளைக் கையளிக்காமையின் காரணமாக காணி உரிமையாளருக்கு இழப்பீட்டுத் தொகைக்கு மேலதிகமாக ரூபா 2,554,327 வட்டியையும் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 2,554,327 மேலதிக செலவினமொன்று அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது.

**3.14 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமன்றி மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) மாவட்ட செயலகத்தின் செயற்பாட்டில் ஆனமடுவ நடன மண்டப நிர்மாணத்தின் 01 ஆம் கட்டத்தின் கீழ் ரூபா 18,149,912 தொகையில் கூரை வரை நிர்மாணங்களை மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. அதற்கான மேலதிக வேலையையும் உள்ளடக்கி ரூபா 22,179,685 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் இரண்டாவது கட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான நிதிஏற்பாடு கிடைக்காமையினால் அந்த வேலைகளைப் பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முடியாதிருந்தது. எனினும் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இயற்கை அனர்த்தங்களுக்கு உட்பட்டமையினால் சீராக வீழ்ச்சியடையும் நிலைக்கு உட்பட்டிருந்ததுடன் நிலமும் காடு வளர்ந்து காணப்பட்டது.

(ஆ) கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் கரம்ப பிரதேசத்தில் குடிநீர் உத்தேசத் திட்டத்திற்காக குழாய்க்கிணறொன்றை நிர்மாணிப்பதற்கு சமுர்த்தி அதிகாரசபை மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சிலிருந்து ரூபா 1,751,358 தொகையான முற்பணம் தேசிய நீர்வளங்கள் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. தொழில்நுட்ப வழுவின் காரணமாக கிணற்றின் நீரை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முடியாதிருந்தது. தனியார் காணியொன்றில் காணப்பட்ட இரண்டு குழாய்க் கிணறுகளை அதனைப் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு பின்னர் உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நீரைப் பரிசோதனை செய்யும் கட்டணமாக

ரூபா 536,130 தொகை செலுத்தப்பட்டிருந்த முற்பணத்திலிருந்து நீர் வளங்கள் சபை கழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. எஞ்சிய ரூபா 1,215,228 தொகையை மீள வழங்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும், அதனை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நீர் வளங்கள் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் ''டச்பே'' கிராம உத்தியோகத்தர் பிரிவில் 48 வீடுகள் உள்நாட்டு அகதிகளின் நலன்களுக்காக நிர்மாணிப்பதற்கு மீள்குடியேற்ற அமைச்சிலிருந்து ரூபா 2,560,000 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரப் பிரதேசத்தில் காணி சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டமையினால் வீடுகளை நிர்மாணிப்பதற்காக அவ்வதிகாரசபையின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டில் தெயட்ட கிருள (தேசத்திற்கு மகுடம்) நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி ரூபா 972,356 தொகையில் நிறைவேற்றுவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டு மஹகும்புக்கடவல பிரதேச செயலகப் பிரிவில் கொக்கிச்சவன்குளம் குடிநீர் கிணறு நிர்மாணம் தொடர்பாக நீர் வளங்கள் சபையின் ஆலோசனையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் போதியளவான நீர் காணப்படாமையினால் நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 382,666 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பிரதேசத்தின் மக்களுக்கு அதன் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(உ) றஜவீகம அமுணுவெவ குடிநீர் செயற்திட்டத்திற்குத் தேவையான நீர்க்குழாய் மற்றும் உப பாகங்களுக்காக 2013 ஆம் ஆண்டின் போது மாவட்ட செயலகத்தினாலும் ரூபா 311,186 பெறுமதியான நீர்க்குழாய் மற்றும் உபபாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. பின்னர் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ரூபா 247,678 பெறுமதியான நீர்க்குழாய் மற்றும் உப பாகங்கள் மீண்டும் நவகத்தேகம பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் எஞ்சிய ரூபா 63,508 பெறுமதியான நீர்க்குழாய் மற்றும் உபபாகங்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு மாவட்ட செயலாளர் தவறியிருந்தார்.

(ஊ) 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 3,176,844 செலவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த மாதம்பை பிரதேச செயலகப் பிரிவில் மஹகம வடக்கு மற்றும் தம்பகல்ல நீர்ச் செயற்திட்டம் மற்றும் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 504,661 தொகை செலவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த கோன்கஸ்யாய நீர் செயற்திட்டத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு 2016 ஆம் ஆண்டின் போது நிதிஏற்பாடு ஒதுக்கப்படாமையினால் அவற்றின் நலன்கள் பிரதேசத்தின் மக்களுக்கு கிடைத்திருக்கவில்லை.

(எ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 3,385,692 செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஹெவன பன்கொட திசேரா கிராமத்தின் இரண்டு நீர் செயற்திட்டங்களின் எஞ்சிய வேலைக்காக 2016 ஆம் ஆண்டின் போது நிதிஏற்பாடு வழங்கப்படாமையினால் அதன் நலன்கள் பிரதேச மக்களுக்கு உரித்தற்றுப் போயிருந்தது.

**3.15 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மூன்று பிரதேச செயலகங்களின் நலனாளிகளுக்கு வழங்குவதற்கு ரூபா 714,016 கூட்டுபெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அப்பொருட்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் பிரதேச செயலகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) புத்தகளம் பிரதேச செயலகத்தினால் பொலிஸ் அறிக்கை பெற்றுக் கொள்ளப்படாமல் அடகு வைத்தல் நிலைமையொன்றை நடாத்திச் செல்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே செயலகப் பிரிவில் 04 அடகு வைத்தல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திரங்களின் கால எல்லை முடிவடைந்திருந்ததுடன் காப்புறுதி மேவுகையும் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) மஹகும்புக்கடவல பிரதேச செயலகத்தின் மூலம் 2016 இன் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் செயற்திட்டத்தின் மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது பிணை மற்றும் செயலாற்றல் பிணை முறியும் உள்ளடக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. அவற்றுக்குக் கொடுப்பனவு செய்யும் போது அந்த பிணை முறிகளின் தொகையையும் உள்ளடக்கி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக பிணை மற்றும் பாதுகாப்பு பிணை முறித் தொகையும் பெறப்பட்டு பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) சிலாபம் பிரதேச செயலகத்தால் மல்வத்த சேர்விஸ் நிறுவனத்திற்கு அருகிலுள்ள வீதிக்கு முற்கலவை கொங்கிரீட் கற்கள் பதித்து அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கொடுப்பனவு அறிக்கையை தயாரிக்கும் போது வெளிநிறுவனத்திற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்குரிய பெறுமதிசேர் வரி சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மொத்த செயற்திட்டத்திற்காக அந்த வரி கணிப்பீடு செய்யப்பட்டமையால் ரூபா 7,005 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) மஹவெவ பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கைகளுக்குரிய 2016 ஒக்தோபர் மாதத்தின் கைவிரல் அடையாள இயந்திரத்தின் கணனி அச்சிடல் பதிவுகளின் பிரகாரம் 06 உத்தியோகத்தர்கள் 12 தினங்கள் வெளிச்சென்றமை உத்தியோகத்தர்களின் தாமதத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. கையொப்ப பதிவேட்டில் காணப்படுகின்ற நேரத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு மேலதிக நேரடிப்படியும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) நாத்தாண்டிய பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களின் வருகை, வெளிச் செல்கைகளைப் பதிவு செய்கின்ற கைவிரல் அடையாள இயந்திரத்தின் கணனி அச்சிடல் குறிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(எ) அரச ஊழியரொருவர் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது மரணமடையுமிடத்து அவரின் பராயமடையாத பிள்ளைகளின் பெயரில் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்படுகின்ற ஓய்வூதிய நலன்கள் அந்த பிள்ளைகளுக்கு 18 வயது பூர்த்தியடைந்ததன் பின்னர் அவர்களுக்கு வழங்க வேண்டியிருந்தது. எனினும் அந்த வயது பூர்த்தியடைந்ததன் பின்னர் 15 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையிலான கால வீச்சினைக் கடந்திருந்த 07 பாஸ்புத்தகங்கள் 2016 ஒக்தோபர் மாதம் வரையிலும் அவர்களுக்கு விடுவிப்பதற்கு வெஸ்ஸப்புவ பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே ரூபா 200,640 கூட்டுத்தொகையான 06 நிலையான வைப்புக்களுக்குரிய வைப்புச் சான்றிதழும் காப்பகத்தில் காணப்பட்டதுடன் அதற்குரிய விபரங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.16 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 56 | 17 | 39 |
| (ii) | மூன்றாம் நிலை | 36 | 24 | 12 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,017 | 744 | 273 |
| (iv) | ஆரம்ப நிலை | 176 | 175 | 01 |
| | மொத்தம் | 1,285 | 960 | 325 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) பதவி பல வருடகாலமாக வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) கற்பிட்டி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் கணக்காளர் பதவிகள் வெற்றிடமாக இருந்தன. அவ்வாறே புத்தளம் பிரதேச செயலாளர் பதவி மற்றும் தங்கொட்டுவ பிரதேச செயலகத்தின் நிர்வாக, கிராம உத்தியோகத்தர் பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. அதற்காக முழு நேர உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாதிருந்தது.

(இ) 2011 மார்ச் 24 ஆந் திகதிய 3/2011 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச செயலகத்தில் தனியான ஓய்வூதியப் பிரிவொன்றை தாபித்தல், தேவையான வசதிகளை வழங்குதல், போதியளவான பதவியணியினரை வழங்குதல் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தரின் நேரடி மேற்பார்வையின் கீழ் கொண்டுவருதல் போன்றவை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மாதம்பை பிரதேச செயலகத்தில் 1400 அளவிலான ஓய்வூதியக் கோவைகளை பேணிச்செல்வதற்கு அபிவிருத்தி உத்தியோகத்தரொருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.